செய்தி வெளியீடு எண்:1047 நாள்:06.11.2021

<u>செய்தி வெளியீடு</u>

## தமிழ் அகராதியியல் நாள் விழா மற்றும் சொற்குவைப் பன்னாட்டுக் கருத்தரங்கம்

தமிழ் வளர்ச்சித் துறை, தமிழ் இணையக் கல்விக்கழகம் மற்றும் சென்னைப் பல்கலைக்கழகம் இணைந்து, நவம்பர் 8, 9 ஆகிய நாள்களில் நடத்தும் தமிழ் அகராதியியல் நாள் விழா மற்றும் சொற்குவைப் பன்னாட்டுக் கருத்தரங்கம், சென்னை கோட்டூர்புரத்திலுள்ள தமிழ் இணையக் கல்விக்கழகக் கலையரங்கில் நடைபெற இருக்கின்றன.

தமிழில் தற்போதுள்ள அகராதி அமைப்பு முறைக்கு முன்னோடியான சதுரகராதி உள்ளிட்ட பல அகராதிகளைப் படைத்ததோடு, இலக்கியம் இயற்றல், மொழிபெயர்ப்பு எனப் பல தளங்களிலும் தமிழுக்குத் தொண்டாற்றிய வீரமாமுனிவருக்குப் பெருமை சேர்க்கும் வகையில், அவரது பிறந்த நாளான நவம்பர் 8ஆம் நாள் "தமிழ் அகராதியியல் நாள் விழாவாக"ச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தால் கொண்டாடப்பட்டுவருகிறது.

அந்த வகையில், நவம்பர் 8ஆம் நாள் நடைபெறும் நிகழ்ச்சியில் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் சார்பில் நடைபெறும் நிகழ்ச்சியில் "வரலாற்றில் கலைச்சொல்லாக்கம்", "மேற்குலகக் கலைச்சொல்லாக்கம்" மற்றும் "சமூகத்தளங்களில் கலைச்சொல்லாக்கம்" ஆகிய பொருண்மைகளில் நடைபெறும் அமர்வுகளில் தமிழறிஞர்கள் நேரிடையாகவும், இணைய வழியிலும் பங்கேற்று தங்களது ஆய்வுரைகளை வழங்கவுள்ளனர். இக்கருத்தரங்கினை மாண்புமிகு தொழில்துறை, தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் தொடங்கி வைத்து, ஆய்வறிஞர்களின் கட்டுரைகளடங்கிய அகராதி ஆய்வு மலரை வெளியிட உள்ளார். மேலும், மாநில அளவிலான கலைச்சொல்லாக்கப் போட்டிகள் மற்றும் ஓவியப் போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவ – மாணவியருக்குப் பரிசுகள் மற்றும் 2020ஆம் ஆண்டுக்கான தூயதமிழ்ப் பற்றாளர் விருது, நற்றமிழ்ப் பாவலர் விருது மற்றும் தூய தமிழ் ஊடக விருது ஆகியவற்றையும் வழங்க உள்ளார்.

நவம்பர் 9ஆம் நாள் நடைபெறும் சொற்குவைப் பன்னாட்டுக் கருத்தரங்கினை மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள்

தொடங்கி வைத்து, தமிழ் இணையக் கல்விக்கழகம் நடத்திய "கணினித்தமிழ் வளர்ச்சியும் சவால்களும்" என்ற இணையவழிப் பன்னாட்டு மாநாட்டின் ஆய்வுக்கட்டுரைகள் அடங்கிய தொகுப்புகளை வெளியிடுகிறார்.

மேற்படி கருத்தரங்கில் "காட்சி ஊடகங்களில் கலைச்சொல்லாக்கம்" நவீன அகராதியியல் என்னும் பொருண்மைகளில் தமிழறிஞர்களும், ஆராய்ச்சியாளர்களும் பங்கேற்று ஆய்வுரைகளை வழங்கவுள்ளனர். பிற்பகலில் நிகழ்த்துக்கலை மற்றும் நாட்டுப்புறப் பல்சுவை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

மேற்குறிப்பிட்ட நிகழ்வுகளில் அகராதியியல் வல்லுநர்கள், தமிழறிஞர்கள், தமிழாய்வாளர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்கவுள்ளனர்.

**********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9